பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible]

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 13 | ஞாயிற்றுக்கிழமை | (28.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 09

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## மீண்டுமோர் யுத்தத்திற்கு முஸ்தீபு

# கோடிக்கணக்கான ரூபாவில் அரசு ஆயுதக் கொள்வனவு!

### அரசியல் ஆய்வாளர்கள் அதிர்ச்சி


(நமது நிருபர்)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வரும் அதேவேளை முப்படைகளுக்கும் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக பாதுகாப்பு அதிகாரிகளை சர்வதேச நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளமை சமாதானவிரும்பிகள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் அண்மையில் சமர்ப்பிக்கப் பட்ட வரவு செலவுத் திட்டத்தில் முப்படைகளின் பாதுகாப்பிற்கென பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிப்பதாகப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்த வரவு செலவுத்திட்டத்தில் முப்படைகளின் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியானது கடந்த யுத்த காலங்களில் ஒதுக்கப்பட்ட பாதுகாப்புச் செலவீனங்களிலும் பார்க்கக் கூடுதலானது என்றும் தெரிவித்துள்ளனர்.

சமாதான காலத்தில் இத்தகைய பெருமளவு நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டமையானது அரசு தமிழ் மக்கள் மீது பயங்கர யுத்தத்தைத் தொடுப்பதற்காகவே என்றும் அவர்கள் கருத்து வெளியிட்

(10ஆம் பக்கம் பார்க்க)





## மாகாண சபைக்கான உறுப்பினர் அடுத்த தேர்தலுடன் அதிகரிப்பு

(கொழும்பு)

2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படவுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் சேனாநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய 7மாகாண சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 76ஆல் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் மேல்மாகாண சபைக்கு 139 உறுப்பினர்களும் மத்திய மற்றும் தென்மாகாண சபைகளுக்கு தலா 67 உறுப்பினர்களும் வடமேல் மாகாண சபைக்கு 60 உறுப்பினர்களும் வடமத்திய

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமுக்கு எதிராக துண்டுப்பிரசுரம்

(மட்டக்களப்பு)

"பள்ளிவாசல் திறக்கவரும் சாத்தான்களின் சாதனை" என்ற பெயரில் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் முன்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழுவினரை விமர்சிக்கும் வாசகங்கள்

# சார்க் மாநாடு திட்டமிட்டபடி ஜனவரியில் நடைபெறும்

## பாக்.வெளிநாட்டமைச்சர் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

சார்க்நாடுகளின் உச்சி மாநாடு ஏற்கனவே திட்டமிட்டபடி 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெறுமென்று பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் அறிவித்துள்ளார்.

பாகஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் மீது இரண்டு தடவை குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்ட நிலையில் சார்க் மாநாடு சம்பந்தமான மேற்கண்ட அறிவித்தலை வெளிநாட்டமைச்சர் அறிவித் (10ஆம் பக்கம் பார்க்க)

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பிஸ்ரல் குழு கொழும்புக்குள் ஊடுருவலாம்

## அரசாங்க புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராகச் செயற்படும் பாதுகாப்பு அதிகாரிகளைக் குறிவைத்து புலிகளால் அனுப்பப்பட்ட நபர்கள் பற்றித் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அதனைத் தாம் விசாரித்து வருவதாகவும் அரசாங்கத்தின் புலனாய்வு வலையமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் இச் சந்தேகநபர்கள் பிஸ்ரல் குழுவினரின் ஒரு பகுதியினராக இருக்கலாம் என்றும் அவர்கள் சிறப்பான ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(த-6)

அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழுவினரை விமர்சிக்கும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"முஸ்லிம் காங்கிரசைக் காட்டிக் கொடுக்காதே","கல்முனையில ஒன்றும் கண்டியில் ஒன்றும் பேசாதே"," பேச்சுவார்த்தை என்ற போர்வையில் உலகம் சுற்றாதே" என்ற வாசகங்கள் அந்த சுவரொட்டியில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)



ஈரானில் பூகம்பத்தால் ஏற்பட்ட இடிபாடுகளையும், இடிபாடுகளுக்குள் சிக்கிப் பலியானவர்களின் சடலங்களை மீட்புப் பணியாளர்கள் மீட்பதையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் இன,மத,பிரதேச வேறுபாடு ஏற்பட மக்கள் இடமளிக்கக் கூடாது

## அஸ்கிரிய பீடாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

தேசப்பற்றுடன் நாட்டுக்குச் சேவை செய்யத் திடசங்கற்பம் கொண்டிராத கட்சிகளுக்கோ அல்லது தனி நபருக்கோ தேர்தல்களின் போது வாக்களிக்கக் கூடாது.

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்திரகித்த தேரர் மக்களைக் கேட்டுள்ளார்.

மாத்தளை அலுவிகாரை பிரதம குருவின் 80-வது பிறந்த தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

மக்கள் மனங்களை ஈர்க்கும் வகையில் இதுவரை இந் நாட்டின் எந்த அரசியல் கட்சியும் ஆட்சிப் பலம் பெறாமல் இருப்பது ஒரு துப்பாக்கியமே.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கென்று வருடாந்தம் அரசு நிதி ஒதுக்கிவருகின்ற போதும், பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கோ அல்லது அதன் வளர்ச்சிக்கோ இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஒரு சாபக் கேடாகும்.

அத்துடன் இன ஐக்கியம், மனித நேயம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பௌத்த மதத்தை தேசிய மதமாகக் கொண்டுள்ள இந் நாட்டில் எக்காரணங்கொண்டும் இன,மத,மொழி,பிரதேச வேறுபாடுகள் வேரூன்றச் செய்ய எந்த சக்திக்கும் இடமளிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ-10)

**பாதுகாப்பான-நம்பிக்கையான பாலியல் நடத்தை உங்களையும், உங்கள் சமூகத்தையும் எயிட்ஸிலிருந்து பாதுகாக்கும்.**

# 650,000 அ. அட்டைகள் இவ்வாண்டில் விநியோகம்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தால் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இம்மாத நடுப்பகுதி வரை 6 லட்சத்து 50 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகள் மூலம் 71 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளும்,

கடந்த செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஒரே நாளிலான அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் மூலம் 14 ஆயிரம் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவைதவிர பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கென 9 ஆயிரம் அடையாள அட்டைகளும் காணாமல் போன அடையாள அட்டைகளுக்குப் பதிலாக வழங்கப்பட்ட 74 ஆயிரம் புதிய அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசிய அடையாள அட்டை விநியோகத்தின் மூலம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வருமானத்தை ஆட்பதிவுத் திணைக்களம் வருமானமாக பெற்றுள்ளதாக திணைக்கள ஆணையாளர் விஜயரட்ணதுங்க தெரிவித்துள்ளார். (தி-60,10)

## கடற்றொழிலாளர் சம்மேளனம்

(திருநெல்வேலி)

கடற் தொழிலாளர்கூட்டுறவுச் சங்கங்களின், சமாசங்களின் சம்மேளனம் யாழ்ப்பாணம் பீச் றோட்டில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இயங்கவுள்ளது.

இதன் பொருட்டு சம்மேளனத்திற்கான கட்டடத் திருத்தப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (த-43)

## ஒளி விழா

(திருநெல்வேலி)

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய ஒளிவிழா நிகழ்ச்சி இன்று மாலை 6.30 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அருட் தந்தை அன்ரன் ஜோர்ஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (த)

# முஸ்லிம் குழுக்களிடையே மோதல் ஒன்பது வீடுகள் எரிந்து நாசம்

புத்தளம் புழுதிவயல் பகுதியில் இரு முஸ்லிம் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து அப்பகுதியிலுள்ள 9 முஸ்லிம் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 9 வீடுகளும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. தெய்வாதீனமாக இச் சம்பவத்தில் உயிரிழப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை ஆயினும், சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இதனால் சேதமடைந்துள்ளன.இச்சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், தலைமறைவாகியுள்ள ஏனைய நபர்களையும் தேடி வருகின்றனர்.

வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்படடு பொருட்கள் அழிக்கப்பட்ட இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடுவதற்கும், விசாரணைகளை மேற்கொள்ளவுமென இரு பொலிஸ் குழுக்கள் விஷேடமாக நியமிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் வயகொடபெல தெரிவித்தார்.இச் சம்பவத்தை அடுத்து புத்தளம் புழுதிவயல் பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. நிலைமையை சீர்செய்வதற்கு விஷேட பொலிஸ் குழுக்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-15)

# திருமலையில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை மேம்படுத்த குழு அமைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மேலும் ஒற்றுமையை வலுப்பெறச் செய்வதற்கு என 12 பேர் கொண்ட குழுவொன்று நியமிககப்பட்டுள்ளது.

திருகோணமலை ஜும்மா பள்ளி வாசலில் அண்மையில் இடம் பெற்ற கூட்டமொன்றின்போதே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

6 முஸ்லிம் பிரதிநிதிகளையும் 6 தமிழ்ப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அண்மைக்காலங்களாக நிலவி வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும். (தி-60,10)

# 8691 குடும்பங்கள் கிளி. மீள் குடியமர்வு

(நவாலி)

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளால் கிளிநொச்சியில் இருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்களில் இதுவரை 8 ஆயிரத்து 691 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ளதாக புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நிலவிய சுமுகமான சூழ்நிலையை அடுத்தே கிளிநொச்சிப் பகுதிகளில் 8 ஆயிரத்து 691 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 802 பேர் மீளக் குடியேறியுள்ளனர்.

அத்துடன்,மேற்படி பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தைமேம்படுத்தவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளவற்றை புனரமைப்புச் செய்வதற்குமென அரசாங்கத்தால் இதுவரை 400 குடும்பங்களுக்கு 4.3 மில்லியன் ரூபா நிதி மீளக்குடியமர்வுக்கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது

மேலும்,இப்பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 3ஆயிரத்து 689 குடும்பங்களும்,திருகோணமலைக்கு 29 குடும்பங்களும் வவுனியாவுக்கு 21 குடும்பங்களும் மட்டக்களப்புக்கு 5 குடும்பங்களும் கண்டிக்கு 3 குடும்பங்களும் முல்லைத்தீவுக்கு 10 குடும்பங்களும் மன்னாருக்கு 2 குடும்பங்களும் மீளக்குடியமரச் சென்றுள்ளதாக அண்மையில் கிளிநொச்சி அரச செயலகத்தால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன. (தி-102)

## மருந்தாளர் பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தனியார் மருந்தகங்களில் தற்போது நிலவும் மருந்தாளர் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் வெளிவாரி மருந்தாளர் பயிற்சிநெறி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.குமாரவேற்பிள்ளை இப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (த)

# வெடி சுட்டு விளையாடுவது குறித்து யாழ். பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீண் மோதல்களை உருவாக்கும் விதத்தில் வெடி சுட்டு விளையாட வேண்டாம் என யாழ். பொலிஸ் நிலைய சிறுகுற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ரௌபாயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பட்டாசு மற்றும் வெடி பொருட்களின் வியாபாரம் அதிகரித்து வருவதுடன், அதை விலை கொடுத்து வாங்கி சுட்டு விளையாடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு சுட்டு விளையாடும் போது பிறரின் உரிமைகளைப் பாதிக்காத வகையில் அவற்றை பயன்படுத்துவதுடன், அதனால் ஏற்படும் விபத்துக்கள் குறித்தும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பட்டாசுகளின் தவறான பிரயோகத்தால் தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலையில் அசம்பாவிதங்களை உருவாக்கக் கூடிய நிலைமையும் ஏற்படும். இவ்வாறான சம்பவங்களை தவிர்தது அனைவரும் சமாதான காலத்தில் ஒரு மகிழ்ச்சியான அசம்பாவிதங்கள் அற்ற புதுவருடக் கொண்டாட்டத்தைக் கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

வெடி சுட்டு விளையாடுவதன் மூலம் பிணக்குகளை உருவாக்க முயல்வோர் குறித்து தமக்கு தகவல தரும்படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், சட்ட நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (தி-4)




சங்குநாதம்
சுனாமியில் இயற்கை
அழிவு




# அழிவு

அரசியலுக்குள் சிக்கியுள்ள
நீதித்துறை

சோமதேரரின் மரணம்
தந்த குழப்பம்

வியாசரின் பதில்கள்

ஆலடி மாநாடு

கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள்...
(தொடர்கதை)

மற்றும் பல அம்சங்களுடன்

வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்

**விலை ரூபா. 14.00**

# எயிட்ஸ் விழிப்புணர்வுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து மேற்கொண்டு வரும் எயிட்ஸ் விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டில் "எயிட்ஸ்" நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக மருத்துவத் தகவல்சள் தெரிவிக்கின்றன. இந் நோய் வராமல் தடுப்பது அனைவரது கடமையாகும்.

"எயிட்ஸ்" தாக்கம் பற்றி பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக டிசம்பர் 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை விழிப்புணர்வு தொடர்பான இல்லத்தரிசிப்பு, கருத்தரங்குகள், கூட்டங்கள், திணைக்களம் மற்றும் நிறுவனச்சந்திப்புக்கள் போன்றவற்றை தமிழீழ சுகாதாரசேவைகள் பிரிவினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய எழுச்சிப்பேரவை சர்வதேச மாணவர் பேரவை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கல்விக்கழகம் மற்றும் அரசியல் துறையினர் மேற்கொண்டு வரும் எயிட்ஸ் நோய்த்தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான செயற்பாடுகளுக்கு அனைத்துப் பொது அமைப்புகளும் ஒத்துழைப்பு நல்குமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றிய பொதுச்செயலாளர் திரு. ப.கனகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், கல்விக்கூடங்கள், ஊழியர்தொழிற் சங்கங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று திரண்டு தம்மையும் ,சமூகத்தையும் பாதுகாப்போம்.பாதுகாப்பான பாலியல் நடத்தை எங்களையும் எங்களது சமூகத்தையும் பாதுகாக்கும் அதுவே ஆட்கொல்லி நோயான "எயிடஸ் ஐ அடியோடுவிரட்டும். (த)


## பொன் விழாவும், நூலகத்திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கலைமகள் சனசமூக நிலைய பொன்விழாவும், நூலக திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நிலையத் தலைவர் எஸ். நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் பிரதம விருந்தினராகவும், நல்லூர் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.ரட்ணராஜா மற்றும் நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் க.ஈஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-18)

# ரணிலை ஓரம் கட்ட முனையும் சந்திரிகா




# புத்தாண்டு தேநீர் உபசாரத்துக்கு ஜனாதிபதி பிரதமருக்கு அழைப்பு

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு எதிர் வரும் 31ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றக கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ள தேநீர் விருந்து பசாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், அமைச்சர்களையும் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இவ் விருந்துபசாரத்திற்கான அழைப்புக் கடிதங்களை பிரதமர் உட்பட அமைச்சர்கள் அனைவருக்கும் ஜனாதிபதி தனித்தனியே அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையேயுள்ள அரசியல் முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் முகமாகவே இத் தேநீர் விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த மாதம் 4ஆம திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் 3 முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு, உட்துறை, மக்கள் தொடர்பாடல் என்பனவற்றை பொறுப்பேற்ற பின் ஜனாதிபதிக்கும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையில் ஜனாதிபதி இத்தகைய நல்லெண்ண அழைப்பினை விடுத்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (தி-10)

## கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

வத்தளை மாபோல பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் சிலர் கைக்குண்டு வீச்சை நடத்தியுள்ளதுடன், வீட்டில் இருந்தவர்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 3பேர் கடும் காயங்களுக்குள்ளாகிய நிலையில் இராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலை மேற்கொண்டதாகக்கூறப்படும் நபர்கள் தப்பித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, நீர்கொழும்பில் உள்ள வீடொன்றில் இருந்து துப்பாக்கி உட்பட்ட பல ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், அவ் வீட்டில் இருந்த இருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர் (தி-61,10)

# அமைச்சரவையின் தீர்மானத்தை மாற்றாவிடில் மீண்டும் வேலைநிறுத்தம்

## சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்களின் புதிய திருத்த சம்பளத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் பீ.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரவு - செலவுத் திட்டம் ஊடாக அதிகரிக்கப்பட்ட சம்பளமும், சுகாதார சேவை ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட விசேட சம்பளமும் இதன்மூலம் வழங்கப்படும்.

சுகாதாரசேவை ஊழியர் களின் விசேட சம்பள அதிகரிப்பு 3கட்டங்களாகவே வழங்கப்படும்.

முதல்கட்ட சம்பள அதிகரிப்பு ஜனவரிமாத சம்பளத்துடன் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சம்பள அதிகரிப்பு 3 கட்டங்களாகவே வழங்கப்படும் என்ற அமைச்சரவையின் தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றும், அவ்வாறு மாற்றங்கள் செய்யப்படாதவிடத்தில் தாம் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிககவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (த-60,10)



இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் ஏற்பாட்டில் வலி- வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வயோதிப மாது ஒருவருக்கு பிரதேச செயலகத்தில் வைத்து அமைச்சின் உதவிச் செயலாளர் து. வைத்திலிங்கம் உடுபுடவை வழங்குவதையும் வலி- வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஆகியோர் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிடம் மகஜர் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# புலிகளின் இடைக்காலத் திட்டவரைபை எதிர்க்கட்சிகள் நிராகரிக்கக் கூடாது

## மாதம்பகம தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை ஊக்குவித்து அவற்றை மேம்படுத்துவதற்கு சமாதான ஆர்வலர்களைக் கொண்ட 9 குழுக்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் சங்கைக்குரிய மாதம்பகம அசுவித்தேரர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அடுத்தமாதம் முதல் நாடு முழுவதிலும் மக்கள் சமாதான மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்மன்றங்களில் இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்களும் அங்கம் வகிக்கவுள்ளனர் எனக் குறிப்பிட்ட அவர்,

வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகசபை குறித்த விடுதலைப்புலிகளின் யோசனைகளை எதிர்க்கட்சிகள் நிராகரிக்கக்கூடாது என்றும் கேட்டுள்ளார். (த-60,10)


### வரும் நாள்களில் மீனாவை திரையில் பாருங்கள்

மீனா

முற்றிலும் கார்ட்டூன் படங்கள் இசை, விசேட ஒலிக் குறிப்புகளுடன் தமிழ், சிங்கள, ஆங்கில உரையாடல்களுடன் 3மணித்தியாலங்களைக்கொண்ட வீடியோப் படமாக வழங்கப்படுகிறது. இதனைப் பெறவிரும்புகின்ற பொது நிறுவனங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள், சிறுவர் இல்லங்கள் போன்றவை எம்முடன் தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்-30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.



unicef

(C/6946)

# செய்தித்துளிகள்

## இந்தியா கடனுதவி

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் கடன் உதவியுடன் ரயில்வேத்துறை நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இலங்கையில் உள்ள சகல ரயில் பாதைகளும் நவீன மயப்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே அதிகாரசபையின் தலைவர் ஹேமச் சந்திரன் குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

மேற்படி கடனுதவிக்கான ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது குறிப்பிடத்தககது. (தி-61,10)

## மட்டக்களப்பில் வறட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகின்றமையினால் அங்கு பெருமளவு நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட விவசாய உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், விவசாயிகள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்க காப்புறுதி நிறுவனங்கள் முன்வர வேண்டும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட விவசாய அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

(தி-60,10)

## யாத்திரிகர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கையில் இருந்து செல்லும் ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கையை 500 ஆல் அதிகரித்துள்ளது.

இதன பிரகாரம் கடந்த ஆண்டை விட மேலும் 500 யாத்திரிகர்கள் ஹஜ் யாத்திரைக்கு செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர். (தி-60,10)

## அமெ.முன்னாள் அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் மெடிலின் ஒல் பிறைட் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் மார்ச்மாதம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவள்ள "அனைத்துலக விவகாரங்களுக்கான கற்கை நெறிக் கருத்தரங்கில்" கலந்து கொள்வதற்காகவே அவர் இலங்கை வரவுள்ளார். (தி-61,10)

## தொழில் உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள 110 மனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய யூனியன் ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கியூடெக் நிறுவனத்தால் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன மீசாலை, நாவாந்துறைப் பகுதிகளிலுள்ள மேற்படி குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ளதாக கீயூடெக் நிறுவன இயக்குநர் வணபிதா சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார். (தி-16)

## மூவிமெண்டோ உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம அலுவலக பிரிவில் வாழும் விதவைகளுக்கு மூவி மெண்டோ நிறுவனம் ஆடுகளை வழங்கி வருகிறது.

மேற்படி பகுதியில் வசிக்கும் 12 விதவைகளுக்கு சுய தொழில் முயற்சிக்காக ஒரு குடும்பத்திற்கு 4 மறி ஆடுகளும் ஒரு கடாவும் வழங்கப்படுகிறது.

(தி-35)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் தொழிலகத்தினால் திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு இந்துசமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (தி)

## இடமாற்ற கடிதங்களை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இதற்கமைய வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட 35 ஆசிரியர்களும், யாழ்.மாவட்ட ஏனைய கல்வி வலயங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட 34 ஆசிரியர்களும் எதிர்வரும் 29ஆம் திகதி தமது இடமாற்றக் கடிதங்களை பெற்றுக் கொள்ளலாம். (தி-3,7)

## மரக்கன்று விநியோகம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராமசேவக அலுவலர் பிரிவில் விவசாய திணைக்களத்தினால் பயன்தரும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

வன வளப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தேக்கு, கமுகு, மலைவேம்பு, சமண்டலை, மாதுளை போன்ற பயன்தரும் மரக்கன்றுகள் ஒரு குடும்பத்திற்கு தலா 10 கன்றுகள் வீதம் 50 குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. (தி-35)

## ஒன்றுகூடலும், பிரிவுபசாரவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய ஒன்று கூடலும் பிரிவுபசார விழாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் யாழ். வலய நலன்புரிக் கழகத் தலைவர் நா.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-3,7)

## மாநகர முன்னாள் முதல்வர் காலமானார்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர, கோட்டை மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், சட்டத்தரணியுமான சந்திர டி சில்வா கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று முன்தினம் காலமானார்.

53 வயதான இவர் கோட்டை மாநகரசபையின் முன்னாள் முதல்வராவார். 1975 ஆம் ஆண்டு அரசியலில் ஈடுபட்ட இவர் 1997 ஆம் ஆண்டு கோட்டே நகரசபைத் தலைவராக பதவியேற்றார். பின்னர் நகரசபையை மாநகரசபையாக மாற்றும் முயற்சியில் இவர் ஈடுபட்டார். (ச)

## கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திவ்விய ஜீவன சங்கத்தின் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இக கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. (தி)

## பயிற்சிப்பட்டறை

(மருதங்கேணி)

யு.என்.ஏச்.சி.ஆர் அனுசரணையுடன் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிராம மட்ட அமைப்புத் தலைவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பயிற்ச்சிப் பட்டறை 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இப் பயிற்ச்சிப்பட்டறை மருதங்கேணி உதவி அரசாங்க செயலக மணடபத்தில் உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.(தி-35)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தரம-5 புலமைப்பரிசில் மாதிரித் தேர்வுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-3,7)

## மண்டபம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக இக்கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கிராமத்தின் பிரதான வீதி உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகளும் இக் கழகத்தினரால் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (தி-64,8)

## வடக்குக்கிழக்கில் 154 அதிபர் வெற்றிடம்

(மருதங்கேணி)

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்த 154 பேருக்கு வெற்றிடம் நிலவிவருகிறது.

வட-கிழக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆயிரத்து 546 அதிபர்கள் தேவையாக இருந்தபோதும், ஆயிரத்து 392 பேரே தற்போது சேவையில் உள்ளனர்.

அதிகமான பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களே தற்போது பாடசாலைகளின் பொறுப்பு அதிபர்களாக கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி-35)

## நிர்வாகசபை தெரிவு

(ஆனைக்கோட்டை)

சாவற்கட்டு இளைஞர் கழகத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும், பொதுக் கூட்டமும் அண்மையில் இடம்பெற்றது.

மேற்படி கழகத்தின் புதிய தலைவராக இ.இந்திரபாதமும், நிர்வாக சபை உறுப்பினர்களாகப் 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (த-201)

## விதவைகளுக்கான "மலர்வு" மையம்

(ஆனைக்கோட்டை)

சாவற்கட்டு பகுதியில் விதவைகளுக்கான மலர்வு மையமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது விதவைகளானவர்களின் நலன் கருதியே இவ் மலர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

"தாரகா" எனப் பெயரிடப்பட்ட இவ் மலர்வு மையத்தில், விதவைகளுக்கான சிறு தொழில் பயிற்சிகள், பன்ன வேலைப் பயிற்சிகள் பகுதிநேரக் கல்வி போன்றன வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-201)

## புதுவருட திருப்பலி

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தையொட்டி யாழ். மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கும், மறுநாள் காலை 6.30 மணிக்கும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

(த-3,7)

# இந்தியா 89 ஓட்டங்களால் பாக் . அணியை வென்றது

இந்தியாவில் நடைபெற்று வரும் 3 நாடுகள் பங்குபற்றும் கஸ்ரா முக்கோண ஒரு நாள் போட்டித் தொடரில், இந்திய - பாகிஸ்தான் "ஏ" அணிகளுக்கிடையில் கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் இந்திய "ஏ" அணி 89 ஓட்டங்களால் பாகிஸ்தான் "ஏ" அணியை வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதையடுத்து இந்திய "ஏ" அணி மதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 329 ஓட்டங்களையும் பெற்று கொண்டது. "ஏ" அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய காம்பீர் 82 ஓட்டங்களையும், முகமட்ஹைப் 75 ஓட்டங்ளையும், யுவராஜ்சிங் 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றி இலக்காக 330 ஓட்டங்களைக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் "ஏ" அணி, 240 ஓட்டங்களை மட்டுமே பெற்று 89 ஓட்டங்களால் இந்திய "ஏ" அணியிடம் தோல்வியடைந்தது. பாகிஸ்தான் அணி சார்பில் நவீட் லத்தீப் 128 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இந்திய "ஏ" அணிசார்பில் பண்டாரி 4 விக்கெற்றுக்களையும், யுவராஜ்சிங் 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இம் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான போட்டியில் இலங்கை "ஏ" அணி வெற்றி பெற்று முன்னணியில் திகழ்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

## தமிழீழ விளையாட்டுத் துறையால் அறிமுக அட்டைகள் அறிமுகம்

(ஏழாலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் அறிமுக அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு அங்கீகாரம் அளிக்கும் இவ் அறிமுக அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிமுகஅட்டையைப் பெறாதவர்கள் தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்படும் எந்தப் போட்டிகளிலும் பங்கு பற்ற முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-90)

## ஆஸிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு 366 ஓட்டங்கள்

அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் மெல்போனில் நடைபெற்று வரும் 3வது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியின் முதல் இன்னிங்சில், இந்திய அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 366 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

போட்டியின் நேற்றைய 2ஆம் நாள் மதிய போசன இடைவேளையின் போது, அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்சிற்காக ஒரு விக்கெற் இழப்பிற்கு 52 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது இந்திய அணி 4விக்கெற் இழப்பிற்கு 329 ஓட்டங்களைப் பெற்ற போதும், நேற்றைய தினம் மேலதிக 37 ஓட்டங்களுக்கு தனது மிகுதி 6 விக்கெற்றுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான வீரேந்தர் சேவாக் மற்றும் அகாஸ் சோப்ரா அகியோர் சிறப்பாக ஆடி முதலாவது விக்கெற்றுக்கு இணைப்பாட்டமாக 141 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

வீரேந்தர் சேவாக் 195 ஓட்டங்களையும், அகாஸ் சோப்ரா 48 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததுடன் இரண்டாவது டெஸ்டில் மிகச சிறப்பாக துடுப்பெடுதாடிய ராகுல் ராவிட் 49 ஓட்டங்களுடன் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் யாரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடாததுடன், சச்சின்டெண்டுல்கர் இந்தப் போட்டியிலும் ஓட்டமேதும் பெறாமல் ஆட்டமிழந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-68)

## முக்கோணப் போட்டியில் இந்திய அணி வெற்றி

இந்தியா, இலங்கை மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெற் "ஏ" அணிகள் பங்குபற்றும் முக்கோண ஒரு நாள போட்டித் தொடரில், நேற்று முன்தினம் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய மற்றும் இலங்கை அணிகள் பங்கு கொண்ட போட்டியில், இந்திய "ஏ" அணி இலங்கை "ஏ" அணியை 7 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி கண்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை "ஏ" அணி மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும், இலங்கை "ஏ" அணியினர் 4ஆவது விக்கெற்றிற்கு இணைப்பாட்டமாக 85 ஓட்டங்களை ஸமன் ஜெயந்த மற்றும் நவீட் நவாஸ ஆகியோர் பகிர்ந்துகொண்டனர்.

இதில் ஸமன் ஜெயந்த 65 ஓட்டங்களையும் நவீட் நவாஸ் 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க, இலங்கை அணி 200 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பந்து வீச்சில் இந்திய "ஏ" அணி சார்பில் சஞ்சேபங்கார் 43 ஓட் டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெற்றுக்களைக கைப்பற்றினார்.

பின்னர் பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இலங்கை"ஏ" அணியினர் 39.2 ஓவர் முடிவில் 3 விக்கெற்றை இழந்து, வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் இந்திய "ஏ" அணி சார்பில் ஹேமன் படானி ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், கௌதம் கம்பீர் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை, இலங்கை மற்றும் இந்திய "ஏ" அணிகள் விளையாடியுள்ள 3 போட்டிகளில் தலா 2 போட்டிகளில் வெற்றி பெற்று முன்னணியில் திகழ்கின்றன. எனினும் பாகிஸ்தான் "ஏ" அணி தான் விளையாடிய 2 போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-68)

# எம்மனதில் மறைந்திருக்கும் இறைவனை வெளிப்படுத்த வைப்பதே திருப்பள்ளியெழுச்சி

பண்டிதர் சி.அப்புத்துரை
ஓய்வுபெற்ற அதிபர்

பள்ளி என்பது படுக்கை; அது துயிலுவதற்கு உதவுகின்ற காரணத்தால் துயில்தல் என்னும் பொருள் பயின்று நின்றது. பள்ளியெழுச்சி துயில் எழல் என்பது. இது 'துயிலெடை'' என்று பண்டைய நூல்களில் காணப்படும் துயிலெடை, துயிலெழுதல் என்னும் பொருளை உடையது.

உயிரினம் அனுபவிப்பது போன்று துயில் கொள்ளுதலோ, துயிலுணர்தலோ இறைமைக் குணமாகாது. இறைவன் பஞ்சகிருத்தியங்களுள் ஒன்றாகிய திரோதானம் என்னும் மறைத்தல், அதாவது நம் உள்ளத்தில் தோன்றாது மறைந்திருத்தல், பள்ளிகொள்ளுதல் என்றும் அந்த மறைப்பு நீக்கம்பெற்று வெளிப்பட்டுத்தோன்றுதல் எழுச்சி என்றும் சிந்திக்கப்படும். அப்பள்ளியெழுச்சி தெய்வீகததை உணர்த்தும் திரு என்னும் அடையுடன் சேர்ந்து திருப்பள்ளியெழுச்சி என்று நின்றது.

திருப்பள்ளியெழுச்சி என்னும் இப்பதிகத்தின் திரண்ட பொருட் பேரென் பதாக திரோதான சுத்தி என்னும் தொடர் திருவாசகத் திருவுள்ளக் கிடையிற் குறிப்பிடப்படும். 10 திருப்பாடல்களைக் கொண்ட இப்பதிகம் என்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத் தம் என்னும் பாவின வகைப்பாடல்களால் நிறைவுறுகின்றது. இப்பதிகமும் திருப்பெருந்துறையில் பாடி அருளப்பட்டது என்பர்.



### இப்பதிகத்துள்ள திருப்பாடற் பொருட்செறிவு

நலல இதழ்களையுடைய தாமரை மலர்கள் விரிவதற்கு இடமாகிய சேற்றினால் நிறைந்த வயல்களாற் சூழப்பெற்ற திருப்பெருந்துறையில் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற சிவபெருமானே, நந்திக்கொடியை உடையவனே, என்னையும் ஒருவனாக ஏற்றுக்கொண்டவனே, எமது தலைவனே, எம் வாழ்விற்கு மூலமானவனே, பொழுது விடிந்தது; கழலணிந்த உனது திருவடிகளைத் துணையான மலர்கள் கொண்டு அர்ச்சித்து உனது திருமுகத்து எமக்கு அருள் புரியும் திருநகையைப் பார்த்து வணங்கிடத் துயிலெழுவாயாக.

திருப்பெருந்துறையை இடமாகக் கொண்டுள்ள சிவபெருமானே, அருட்செல்வத்தைத் தரவுள்ள ஆனந்த மலை போன்றவனே, அலையை உடைய கடல் போன்றவனே, பெரியவனே, செங்கதிர்ச் செல்வனாகிய அருக்கனது தேர்ப்பாகன் அருணன். இந்திரன் திசையாகிய கீழ்த்திசையை அடைந்துள்ளான். இருள்நீங்கிவிட்டது. உதய மலைக்கணின்று செங்கதிரோன் உனது மலர்போன்ற திருமுகத்தினின்றும் தோன்றுகின்ற கருணையைபோன்று மேலெழ உனது கண் போன்று தாமரை மலரக் கூட்டமாகவுள்ள வண்டுகள் இசைபாடுகின்றன. இவற்றைத் திருவுள்ளத்தில் ஏற்றருள்க. அதன் பொருட்டுப் பள்ளி எழுந்தருள்க.

தேவனே, திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, அறிதற்கு அரியவனே, எமக்கு எளியவனே, எங்கள் தலைவனே, அழகிய குயில்கள் கூவின; குருவிகள், கோழிகள் சப்தம் செய்யத் தொடங்கி விட்டன. சங்குகள் முழங்குகின்றன. நட்சத்திரங்கள் ஒளி மழுங்கின. உதயகாலத்து ஒளி வெளிப்படத் தொடங்கியுள்ளது. நெருங்கிய வீரக் கழலணிந்த இணையாகிய திருவடிகளை எமக்கு விருப்பத்தோடு காட்டுவாயாக. பள்ளி எழுந்தருள்வாயாக.

திருப்பெருந்துறையை இடமாகக்கொண்ட சிவபெருமானே, அடியேனையும் ஆட்கொண்டு அருளலைச் செய்யும் எம்பெருமானே, இனிய ஒலியை எழுப்புகின்ற வீணையை, யாழை உடையோர் ஒருபக்கமாக, வேதங்களையும், தோத்திரங்களையும் இயம்புவோர் ஒருபுறமாக, நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட மாலைகளை ஏந்திய கைகளை உடையோர் ஒருபுறமாக, வணங்குபவர், அழுபவர் ஒருபுறமாக, துவளுதலை உடையோர் சென்னியில் அஞ்சலி செய்வோர் ஒருபுறமாக, இவர்களுக்கெல்லாம் அருள்புரிய எழுந்தருள்வாயாக.

குளிர்ச்சி பொருந்திய வயல்களாற் சூழப்பட்ட திருப்பெருந்துறை மன்னனே, நினைவிற் கெட்டாதவனே, எங்கள் முன்னேவந்து குற்றங்களை நீக்கி ஆண்டருளுகின்ற எம் தலைவனே! பஞ்சபூதங்களை இடமாக்கி நின்றாய் என்பதல்லது. போதல், வருதல் இல்லாதவர் என்று அறிஞர்கள் இசைப்பாடல்களைப் பாடுவதல்லாது பாடியாடுவதல்லாது உன்னை நேரிற் கண்டவர்களை யாம் கேட்டறிவோம். நாம் நேரே காணும்படி பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக.

உமையாள் மணாளனே, தாமரை நிறைந்து மலர்ந்துள்ள குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, இந்தப் பிறவியை நீக்கி எங்களை ஆண்டு கொண்டருளுகின்ற தலைவனே, பரபரப்பு அற்ற, விடுதலை பெற்ற நிலையில் இருந்து உன்னை உணருகின்ற அடியவர்கள் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கிக்கொண்டார்கள். அவர்கள் மை பொருந்திய கண்களையுடைய தலைவியர் போன்று மனிதவடிவில் நின்றே வணங்குகின்றார்கள். அவர்களை ஆட்கொள்ளவேண்டிப் பள்ளி எழுந்தருள்க.

பரமசிவன் கனிச்சுவை போன்றவர் என்றும் அமுதத்தை ஒத்தவர் என்றும் அறிதற்கு அருமையானவர் என்றும் அதேவேளை எளிமையானவர் என்றும் வாதஞ் செய்து விண்ணவராலும் அறியப்படாதவர். இதுதான் அவன் திருவடிவம்; இவனே அவன் என்றுஞ் சொல்லும்படியாக இந்த உலகிற்கு வந்து எங்களை ஆட்கொண்டருளுகின்ற தேன் பொருந்திய, சோலைகள் சூழ்ந்த திருவுத்தர கோசமங்கையில் எழுந்தருளியவனே, திருப்பெருந்துறை மன்னா, எம்மை ஏவல் கொள்ளும் முறைமை எது? அதை யாம் அறிய விரும்புகின்றோம். அதன்படி நடப்போம். பள்ளியின்றும் எழுந்தருள்வாயாக.

அருமையான அமுதம் போன்றவனே, எந்தவொன்றுக்கும் முதலாயும் நடுவாயும் இறுதியாயும் உள்ளவனே, மும்மூர்த்திகளும் உன்னை அறியமாட்டார்கள்; யாராற்றான் உன்னை அறியமுடியும்! உமையம்மையுடனாகி உன் பழவடியார் குடிசைகள் தோறும் எழுந்தருளி மேலான சிறப்பைச் செய்தவனே, சிவந்த நெருப்பை ஒத்த திருமேனியைக் காட்டித் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற திருக்கோயிலையும் காட்டி, அழகிய தண்ணளி உடையான் என்பதையும் காட்டி ஆட்கொண்டவனே பள்ளி எழுந்தருள்வாய்.

தேவர்களும் அணுகமுடியாத விழுமியப் பொருளானவனே, உன் தொண்டுவழி நிற்கும் அடியார்களாகிய எமக்கு இங்கு வந்து வாழ்வளித்தவனே, திருப்பெருந்துறையில் எழுந்தருளியவனே, பரம்பரை அடியராகிய எங்களுடைய கண்ணில் நின்று மகிழ்வைச் செய்கின்ற தேன் போன்றவனே, அன்பு செய்கின்ற அடியார்கள் சிந்தனையில் உள்ளவனே, உலகிற்கு உயிர் போன்றவனே, எம் தலைவனே பள்ளி எழுந்தருள்க.

திருப்பெருந்துறையுறைப் பெருமானே, பூமிக்கு வந்து பிறவாமையினால் வீணாகவே நாள்களைப் போக்குகின்றோம். பூமிதான் சிவன் நம்மை உய்யும்படி ஆட்கொள்ளும் இடம் என்று பிரமா ஆசைப்படவும் திருமால் விருப்பமடையவும் உனது பரந்த உண்மையான திருவருட் சக்தியும் நீயுமாகப் பூமிக்கு எழுந்தருளி எம்மை ஆட்கொள்ள வல்லவனே, அமுதம் போன்றவனே, பள்ளி எழுந்தருள்க எனத் தனது உள்ளத்தில் சிவனை எழுந்தருளவேண்டிப் பணிந்து பாடி இன்புறுகின்றார்.

கடந்த ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய

ரயில் கட்டண அதிகரிப்பு குறித்த

பணிந்து பாடி இன்புறுகின்றார்.

கடந்த ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய

# 700 பாடசாலைகளில் மாணவர் எவரும் உயர்தரத்திற்கு தகுதிபெறவில்லை

## கல்வித்திணைக்களப் புள்ளிவிபரம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் இருந்து 400 பாடசாலைகள் க.பொ.த (சா/த)பரீட்சைக்கு மாணவர்கள் எவரையும் அனுப்பியிருக்கவில்லை என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் 15 பாடசாலைகள் கொழும்பைச் சேர்ந்தவை. அத்துடன், கடந்த ஆண்டு 700 பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒருவரேனும் உயர்தரத்திற்குத் தகுதி பெறவில்லை. இதில் பெருமளவானவை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள். இப் புள்ளி விபரம் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

இதேவேளை, 1996இல் இருந்து 2002இல் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றோர் தொகை கிட்டத்தட்ட 2 மடங்காகியுள்ளது.

மொத்தம் 422 பாடசாலைகள் கடந்த 2002 சா/த பரீட்சைக்கு மாணவர் எவரையும் அனுப்பிவைக்கவில்லை. பாடசாலைகளில் 4.2 வீதமானவர்களில் சாதாரணதர மாணவர்கள் தமது சாதாரண தரப் பரீட்சைகளில் 75 வீத சித்தியடைந்துள்ளனர். இதில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய சித்திகளும், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அதிகுறைந்த சித்திகளையும் பெற்றுள்ளன.

மிகக்குறைந்த தர பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் என பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது. மாணவர்களின் குறைந்த கல்வித் தரத்திற்குக் காரணம் அத்தியா வசியமான பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையே என கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும்; உலக வங்கியும் நிதியுதவிகளை வழங்கவிருக்கிறது. அத்துடன், மாணவர்களைச் சரியான பாதையில் இட்டுச்செல்ல பாடசாலை மட்டக் கணிப்படுகளே உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

# அடுத்த ஆண்டு முதல் 10வீத ஓய்வூதிய அதிகரிப்பு அமுலாகும்

(கொழும்பு)

2004ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின்படி ஓய்வூதியம் பெறுவோருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட 10 சதவீத ஓய்வூதிய அதிகரிப்பு ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்படவுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் விக்ர சமரவீர தெரிவித்துள்ளார்.

ஓய்வூதிய அதிகரிப்புக் குறித்து சுற்றுநிருபம் வெளியிடப்படாது விட்டாலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய ஜனவரி மாதத்தில் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (த-60,10)

# ரயில் கட்டண அதிகரிப்பு குறித்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரயில் கட்டணங்கள் நேற்று முதல அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கருத்துக் கூறுகையில்,

ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சு தீர்மானித்தாலும், அத்தகைய கட்டண அதிகரிப்பை ரயில்வே அதிகாரசபையே அமுல் செய்யும்.

அத்துடன், ரயில்வேத் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள நஷடத்தை ஈடுசெய்வதற்குக் கட்டணத்தை அதிகரிப்பதால் கிடைக்கும் பணம் போதுயதாக இருக்காது. எனினும், நீண்ட தூர ரயில்சேவைகளுக்கான கட்டணங்கள் 60சதவீதத்தாலும் குறுகிய தூர ரயில்சேவைகளுக்கு 40 சதவீதத்தாலும் கட்டண அதிகரிப்பு அமுல்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்படி கட்டண அதிகரிப்புக்கள் இதுவரை அமுல் படுத்தப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த-60,10)

# பிரதேச செயலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

(கொழும்பு)

தென்னிலங்கையில் உள்ள 308 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

புளத் சிங்களப் பிரதேச செயலாளர் அரசியல்வாதி ஒருவரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து கடந்த 24ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

இவ்விடயம் குறித்து அரசாங்கம் எடுத்த நடவடிக்கை காரணமாகப் பிரதேச செயலாளர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தப்போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக நிர்வாக சேவைகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-60,10)

## சிறு விளம்பரங்கள்

### பிரத்தியேக வகுப்பு

கணிதம் தரம் 6தொடக்கம் *O/L* வரை *G.C.E. O/L* பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற கற்பிக்கப்படும். அடிப்படை அறிவில்லாத மாணவர் களிற்கு மிகவும் இலகுவான முறையில் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- எஸ். குமணன் தொலைபேசி:- 0776176482. (8064)

### கல்வி

English, Maths உட்பட சகல பாடங்களும் ஆண்டு 3,4,5 புலமைப்பரிசு, 6உம் English Medium தரம் 6,7உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு:85,சிவன் கோவிலடி சிவன் கோவில் பின்புறம், திரு நெல்வேலி. (8053)


## விவசாயிகள் கவனத்திற்கு

(கொழும்பு)

உரிய தராதரங்களைக் கொண்டிராத பீடை கொல்லிகள் குறித்து விவசாயிகள் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும் என பீடை கொல்லிகளின் பதிவாளர் டாக்டர் காமினி குணவீர கேட்டுள்ளார்.

தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் சில பீடைகொல்லிகள் மனித குலத்திற்கு மாத்திரமன்றி, சுற்றாடலிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய பீடைகொல்லிகளை விற்பனை செய்பவர்களுக்கு, பீடைகொல்லிகள் சட்டத்தின்படி இருவருட சிறைத்தண்டனை அல்லது ஒருலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது. (திலி,10)

# இறைவனின் வார்த்தையை தியானிப்பவன் எதற்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லை

காலத்தின் கண்ணாடியாக விளங்குவது சமூகமாகும். சமூக மாற்றங்களே மனித வாழ்வில் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. ஓடாதநீர் குட்டையில் தேங்கிநின்று சிலகாலம் செல்ல நாற்றமடிக்கின்றது. பின்னர் அந்நீரை யாரும் உபயோகிப்பதில்லை. அப்பக்கம் செல்வதுமில்லை. அதேபோன்று வாழ்வில் வளர்ச்சியைத் தராத, வாழ்வுக்குப் பயனளிக்காத பலவற்றை நாமும் எம்முடையவைகள் எனறு சேர்த்து வைத்துள்ளோம். சட்டங்களைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, மறறவர்களின் செயல்களிலே குறைகள் கண்டு தமது குட்டைகளிலே உள்ள நாற்றமடிக்கும் நீரையே பரிசேயர்களான சட்டவல்லுநர்களும் பருகினார்கள். ஆனால் அவர்கள் தவறிழைப்பதாக எண்ணவில்லை.

### இஸ்ராயேலரின் எதிர்பார்ப்பு

பல அரசுகளினால் அடிமைப் படுத்தப்பட்டு வந்த இஸ்ராயேல் இனம் தம்மைத்தாமே ஆளும் சுதந்திர இனமாக மாறத் துடித்துக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்வானது காரிருள் சூழ்ந்த வாழ்வாகக் காணப்பட்டது. எனவே, அவர்கள் பலவிதத்திலும் தம்மை அடிமைத் தளையில் இருந்து விடுவித்து படைபலம் பொருந்திய பாதுகாப்பான வாழ்வைக் கொடுக்கும் மீட்பரையே அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், இறைவன் வகுத்த திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. ஆனமீக விடுதலை அளிக்கும் உண்மைக்குச் சான்று பகரும் அரசரை அனுப்புவதே இறைவனுக்கு உகந்ததாக அமைந்தது.



### இறைவனின் விருப்பம்

ஓர் அரசனை அல்லது அரச பிரதிநிதியை வரவேற்பதற்கு நாங்கள் பல்வகையான ஆயத்தங்களை, ஏற்பாடுகளைச் செய்கின்றோம். இவைகள் எல்லாம் முடிந்த பின்னர் ஒத்திகை பார்க்கின்றோம். காரணம் அந்த வரவேற்பானது சரியான விதத்தில் சிறப்பாக நடைபெறவேண்டும் எனறு. மட்பராக உலகில் வர இருந்த யேசுகிறிஸ்துவின் வருகைக்கும் மக்களை ஆயத்தம் செய்ய இறைதம் வாழ்வை நிர்ணயிக்கும் காரணிகளாகக் கருதி நடக்கின்றார்கள். இறைவனுடைய வருகையானது திருடனைப்போல இடம்பெறும். அப்போது எம்மை யாரும் காப்பாற்ற முடியாது. நாமிருக்கும் நிலையிலேயே நமது விண்ணக வாழ்வுக்கான அல்லது தண்டனை வாழ்வுக்கான தீர்ப்புக் கிடைக்கும்.

## பரமபிதா காட்டிய பாதை

பிதாப்பிதாக்கள் முதல் இறைவாக்கினர்கள் வரை மக்களை ஆயத்தம் செய்ய அனுப்பிவைத்தார். காரணம் மக்கள் மெசியாவின் வருகையினால் இறையரசைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும் என்று விரும்பினார்.

### இன்றைய மக்கள்

வெளிநாட்டுப் பணவருவாயும் நாகரிக மோகமும் எமது மக்களின் வாழ்வியலைச் சீரழிக்கின்றது. இதனாலே பெரியோர்களைக் கனம் பண்ணாத நிலையும், பண்பாட்டு விழுமியங்களை மதிக்காத போக்கும் விரைவாகப் பரவி வருகின்றது. இறைவனை மறந்த நிலையில் மக்கள் பணம் தேடுவதற்கே அதிக நேரத்தைச் செலவிடுகின்றார்கள். படைத்து, காத்து, பராமரிக்கும் தேவனுக்கு நன்றிசொல்ல மறக்கின்றார்கள். தொழில்நுட்ப ஊடகங்களே

இறைவனுடைய வார்தையைக் கருத்தாய்த் தியானிப்பவன் அவருடைய குரலுக்குச் செவிசாய்ப்பவன் பேறுபெற்றோன். அவன் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. மாறாக உலக இன்பங்களில் காலத்தைச் செலவிடுகிறவன் இறுதியில் பாதாளப் படுகுழியில் வீழ்வான். அவனை எவருமே காப்பாற்ற முடியாது. மீட்பரின் வருகை அண்மித்துள்ள இக்காலத்திலே நாம் ஒப்புரவாகிப் பகிர்ந்து வாழ்வோம். இறைவனின் இரண்டாம் வருகைக்கு எம்மை ஆன்மீக வழியில் ஆயத்தம் செய்வோம்.□

**நிலக்ஷி செல்வமகள்**


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

## இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்காணப்படும் இறைச்சிக் கடைகளை 01.01.2004ஆம் திகதி முதல் 31.12.2004ஆம் திகதி வரையான ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் – ரூபா 300/- – (வற் உட்பட)

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி – 30. 12. 2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10. 00 மணிவரை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி – 30. 12. 2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11. 00மணி.

கேள்விகள் திறக்கும் திகதி – 30. 12. 2003ஆம் திகதி மு. ப. 11. 30 மணி

**விபரம்**

| இறைச்சிக் கடைகள் | கடை இல. | கேள்விப் பிணைப்பணம் | சபையால் நிர்ணயித்த தொகை |
|---|---|---|---|
| 01. குருநகர் மாட்டி. கடை | 3 | 5000/- | 174330/- |
| 02. குருநகர் மாட்டி. கடை | 2 | 5000/- | 155250/- |
| 03. குருநகர் மாட்டி. கடை | 1 | 5000/- | 253800/- |


## மாகாணசபை உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

மாகாணசபை உறுப்பினர் களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து தேர்தல் முறையை மறுசீரமைக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் கூடி ஆராயும் என குழுவின் தலைவர் தினேஷ குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பது குறித்து மக்கள் மத்தியில் கடும அதிருப்தி நிலவுவதாலேயே இது குறித்து தாம் விரிவாக ஆராய வேண்டியுள்ளதாக தெரிவுக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமனறத் தேர்தல் முறையை மறுசீரமைக்கும் தெரிவுக்குழுவிடம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் எனப் பலர் கோரியுள்ளனர்.

உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்ற போது எந்தவொரு பிரதேசத்திலும் தனியான உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப் படாதமையே இதற்குக் காரணம் எனவும் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 7 மாகாணசபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடுத்த ஆண்டு முதல் அதிகரிக்கப்படவுள்ளது. இத்தீர்மானம் சனத்தொகையின் அதிகரிப்புக்கு அமையவே எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம அறிவித்துள்ளது. (தி-60,10)

## சுழற்சிக் கடன் நிதியத்திற்கு 11.65 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

வன்னிப்பிராந்தியத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக " சுழற்சிக்கடன் நிதியம் "

அரசசார்பற்ற நிறுவனங்களே நடைமுறைப்படுத்தின.

அத்துடன், இணைந்த 2ஆம் கட்ட நடவடிக்கைக்கென வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன்

| விபரம் இறைச்சிக் கடைகள் | கடை இல. | கேள்விப் பிணைப்பணம் | சபையால் நிர்ணயித்த தொகை |
|---|---|---|---|
| 01. குருநகர் மாட்டிடி. கடை | 3 | 5000/- | 174330/- |
| 02. குருநகர் மாட்டிடி. கடை | 2 | 5000/- | 155250/- |
| 03. குருநகர் மாட்டிடி. கடை | 1 | 5000/- | 253800/- |
| 04. நரிக்குண்டு மாட்டிடி. கடை | 1 | 5000/- | 274500/- |
| 05. நாவாந்துறை மாட்டிடி. கடை | 5 | 2500/- | 9450/- |
| 06. நாவாந்துறை மாட்டிடி. கடை | 1 | 2500/- | 59400/- |
| 07. நாவாந்துறை மாட்டிடி. கடை | 7 | 2500/- | 9630/- |
| 08. நாவாந்துறை மாட்டிடி. கடை | 8 | 2500/- | 5490/- |
| 09. நாவாந்துறை மாட்டிடி. கடை | 9 | 2500/- | 5490/- |
| 10. நாவாந்துறை கருவாட்டுக் கடை | 11 | 1000/- | 3510/- |
| 11. நாவாந்துறை கருவாட்டுக் கடை | 12 | 1000/- | 3510/- |
| 12. புங்கன்குளம் ஆட்டிடி. கடை | 1 | 2500/- | 36360/- |
| 13. பண்ணை ஆட்டிடி. கடை | 3 | 2500/- | 20400/- |
| 14. குருநகர் ஆட்டிடி. கடை | 7 | 2500/- | 9450/- |
| 15. கஸ்தூரியார் வீதி து.ச.வ.பா. நிலையம் | | 2500/- | 49770/- |
| 16. முஸ்லிம் கல்லூரி வீதி ஆட்டிடி. கடை | | 2500/- | 25000/- |

**குத்தகையாளரே இடத்தைத் தெரிவுசெய்யவேண்டும். குறித்த இடம் மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கும் ஜின்னா வீதிக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.**

**மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.**

**மாநகரசபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**26.12.2003**

**இ.இராமலிங்கம், மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7067)

# 11.65 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

வன்னிப்பிராந்தியத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக " சுழற்சிக்கடன் நிதியம் " என்னும் திட்டத்தின் கீழ் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் கடந்த வருடம் 11.65 மில்லியன் ரூபாநிதியை ஒதுக்கியிருந்தார்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு குடும்பத்தலைவரை இழந்த ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள், குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தவர்கள், சொந்தமாக விவசாய நிலங்கள் அற்ற குடும்பங்கள் இந்நிதி உதவி மூலம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களினால் பயனடைந்தனர். இச் சுழற்சிக் கடன் நிதியத் திட்டத்தினை அரசசார்பற்ற நிறுவனங்களே நடைமுறைப்படுத்தின.

அத்துடன், இணைந்த 2ஆம் கட்ட நடவடிக்கைக்கென வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் அமைச்சின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவ் இரண்டாம் கட்ட சுழற்சிக்கடன் திட்டம் மன்னார்,முல்லைத்தீவு, வவுனியா, புத்தளம்,அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கடந்த 1990ஆம் காலப்பகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது.

காலணிகள் தயாரிப்பது, காலணிகளுக்கான மூலப்பொருட்களை தயாரிப்பது போன்ற துறைகளில் புதிய தொழில்களை ஆரம் பிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டன. (தி-6)

## நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட

# 26 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கல்

(கந்தர்மடம்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதான உழைப்பாளரை இழந்த 26 பயனாளிகளுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இனவிருத்திப் பண்ணையில் இருந்து பெறப்பட்ட வெளி வளர்ப்புக்காகச் சிபார்சு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னோடியாக இப்பயனாளிகளுக்கு கோழிக்கூடு, உணவு இடும் கொள்கலன்கள், நீர்வழங்கும் கொள்கலன்கள், தேவையான வளர்தீன் என்பன பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 16 பேட்டுக்குஞ்சுகளும், இரண்டு சேவல்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, 'கோழிவளர்ப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்பும் கால்நடைவளர்ப்பு சுகாதார திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-112)

# ஈரானுக்கு உதவுமாறு அதிபர் கோரிக்கை

# வெளிநாட்டு அமைப்புகள் பல முன்வருகை

(தெஹ்ரான்)
ஈரானின் அதிபர் மொஹமட் கடாமி வெளிநாடுகளிடம் நிவாரண உதவிகளைக் கோரியுள்ளார்.

ஈரானில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பூமியதிர்ச்சியால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளபாக்ரம் விமானப்படை தளத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி கடந்த வியாழக்கிழமை நடந்த அணிவகுப்பில் சாண்டா கிளாஸ்போல் உடையணிந்து கையில் இயந்திரத் துப்பாக்கியுடன் வலம்வந்த யு.எஸ். விமானப்படை வீரர்

பூமியதிர்ச்சியின் காரணமாக பாம் பிரதேசத்திலுள்ள 60 வீதமான கட்டடங்கள் சேதமடைந்துள்ளதால் அதில சிக்கியுள்ளோர்களின் எண்ணிக்கையை அறிவதில் பாரிய சிரமங்களை அதிகாரிகள் எதிர்நோக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் பூமியதிர்ச்சியில் 20 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்டோருக்கு சர்வதேசநாடுகள் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்க முன்வந்திருப்பதாக ரொயிட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜேர்மனி தனது உதவி அனுசரணைகளை நேற்று முன்தினம் உடனடியாக வழங்கியிருந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று ரஷ்யா தனது தரைப்படை மற்றும் விமானப் படைகளை உடனடியாக அனுப்பியுள்ளதுடன் அவர்களுக்குத் தேவையான கூடாரங்கள், தேடுதல கருவிகள், மருந்து வகைகள், மின் பிறப்பாக்க கள், மோப்பநாய்கள், கம்பளிகள், குடிநீர் என்பவற்றை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை ஐக்கியநாடுகள் சபை உடனடி உதவித் தொகையாக 90 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

மேலும் போளின் 500 ஆயிரம் யூரோஜென்களை உடனடி உதவித்தொகையாக வழங்கியிருக்கிறது.

இதேவேளை, பிரித்தானியா போலநது, ஜோர்தான், துருக்கி ஆகிய நாடுகளும் உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

## சீனாவில் சுரங்க விபத்து 26 தொழிலாளர்கள் பலி

(பெய்ஜிங்)
சீனாவின் வட பகுதியில் நிலக்கரிச் சுரங்கத்தில் தீப்பிடித்ததில் 26 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

மின்சாரக் கேபிளில் பற்றிய தீ சுரங்கத்தில் இருந்த மரப்பலகைகளுக்குப் பரவியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

10 சுரங்கத் தொழிலாளிகள் எரிகாயங்களுடன் உயிர்தப்பிவிட்டனர்.

ஏனையவர்களின் சடலங்கள் 10 மணி நேர மீட்பு முயற்சிகளின் பின்பு கிடைத்தன.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் சீனாவில் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் சுமார் 4 ஆயிரத்து 600 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். (து-9)

## அமெரிக்க கால்நடை உணவுகளுக்கு இந்தோனேஷிய அரசு தடை

### விசர்நோய்ப் பாதிப்பே காரணம்

(ஜகார்த்தா)
அமெரிக்கக் கால்நடைத் தயாரிப்புக்களை இறக்குமதி செய்வதற்கு இந்தோனேஷிய அரசாங்கம் தற்காலிக தடை விதித்துள்ளது.

அமெரிக்காவில் பரவிவரும் மாடுகளுக்கான விசர் நோயினால் பாதிக்கபபட்ட கால்நடைகளின் உற்பத்திப் பொருட்களைப் பாவித்த பலர் உயிரிழந்துள்ளதை அடுத்தே இந்தத்தீர்மானம எடுக்கப்பட்டுள்ளது.

சீஸ், இறைச்சி, பால்மா, பதப்படுத்தப்பட்ட பால் போன்ற தயாரிப்புக்களை இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஜப்பான், தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் இவ்வாறான தடையை விதித்துள்ளன.

இந்தோனேஷியா வருடாந்தம் 63 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கால்நடைத் தயாரிப்புக்களை இறக்குமதி செய்தமை குறிப்பிடத்தக்கது. (து-9)

## பொடாவின் கீழ் கைது செய்யப்பட்ட பாவாணன் பிணையில் விடுதலை

(புதுடில்லி)
பொடாச்சட்டத்தின் கழ் கைது செயயபபட்ட தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த புதுக்கோட்டை பாவாணன் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

527 நாட்கள் சிறையில் இருந்த புதுக்கோட்டைப் பாவாணன் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு பிணையில் விடுதலை செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டதை அடுத்து அவரை வரவேற்பதற்காக அவரது ஆதரவாளர்கள் திருச்சி மத்திய சிறைச்சாலையின் முன்கூடியிருந்தனர். ஆனால், 1.00மணிவரை புதுக்கோட்டைபாவாணன் விடுதலை செய்யப்படாததால் அவரது ஆதரவாளர்கள் தமிழக அரசாங்கத்துக்கு எதிராக கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இதனை அடுத்து அவர் 1.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவு நேரகாலத்தில் கிடைக்காததால் தான் அவரை விடுதலை செய்வதில் தாமதம் ஏற்பட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயர்நீதிமன்றத்தால் பிணை வழங்கபபட்டவர்களில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறனின் பிணை மனுவை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளதால் அவர் மட்டும் இன்னும் சிறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (து-9)

## வாஜ்பாயின் பிறந்த தினத்தை முன்னிட்டு குஜராத்தில் 280 கைதிகள் விடுதலை

(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினத்தை முன்னிட்டு குஜராத் மாநிலத்தில் 280 கைதிகளை விடுதலை செய்வதற்கு மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்த வகையில்,மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவிருக்கும் பெருமபாலான கைதிகள் ஆயுள்தண்டனை அனுபவித்துவருவதாக மாநில அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு இன்னும் 2 ஆண்டுகளில் தண்டனைக் காலம் முடிவடைய இருக்கும கைதிகளே விடுதலை செய்யப்படவிருபபதாக குஜராத் மாநில முதல்வர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார். (து-9)

## அண்ணா திராவிட முன்னேற்றக்கழக முக்கிய உறுப்பினர் ரவிசங்கர் கைது

(சென்னை)
ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய உறுப்பினரும் விளாத்திக்குளம் முன்னாள் சட்டசபை உறுப்பினருமான ரவிசங்கர் சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் ஒன்றரைக் கோடி ரூபாய்பெறுமதியுள்ள ஹெரோயின்போதைப பொருளுடன் ரவிசங்கா உடபட 4 போ கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விசாரணையின் பின்னர் 4 கோடியே70 லட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரவிசங்கர் 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்றத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவராவார்.

இதை அடுத்து தி.மு.கவில் இருந்து வலகிய இவர், ஆளும் அண்ணா தி.மு.க வில் இணைந்து கொண்டார்.

இந்த கைது சம்பவத்தை அடுத்து இவரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் உடபட அனைததுப பொறுப்புககளில் இருந்தும் நீக்குவதாக அண்ணா தி.மு.க. அறிவித்துள்ளது. (து-9)



ஆப்கானிஸ்தானில் மூன்று வாரங்களுக்கு முன்பு கடத்தப்பட்ட இந்தியப் பொறியியலாளர்கள் முரளி, வரதய்யா ஆகிய இருவரும் காபூலில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.



புதுடில்லியில் கடுமையான குளிர். அதைச் சமாளிக்க விறகை எரித்துக் குளிர்காயும் தொழிலாளர்கள்.

## பல்வேறு தாக்குதல் சம்பவங்களின் போது ஈராக்கில் 5 அமெரிக்கப்படைவீரர்கள் பலி

(பக்தாத்)
ஈராக்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களின் போது 5 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

பக்தாத்தின் வடபகுதியில் சாலை ஓரமாகக் கிடந்த வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் ஒரு இராணுவ வீரரும்,

கடந்த வெள்ளிக்கிழமை காலையில் பக்குபா நகருக்கு அருகே இதே போன்ற சம்பவத்தில் மற்றும் ஒரு படைவீரரும்,

நகருக்கு வெளியே வெடிகுண்டு ஒன்றைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையின்போது மற்றுமொரு படைவீரரும்,

பக்குபா நகரின் இராணுவ முகாமில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த பீரங்கிக் குண்டுத் தாக்குதலில் மேலும் இரண்டு படைவீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, பக்தாத்தில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக நேற்று முன்தினம் மட்டும் 26 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, ஈராக்கில் அமெரிக்கப்படைகள் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்கள மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால், ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அமெரிக்கப்படைவீரர்கள் மீதான தாக்குதல்கள் குறைவடைந்து இருப்பதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்திருந்தமையும் தெரிந்ததே. (தி-9)

## இன்று ஒரு தகவல்

# பார்வை

ஒரு தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். ஏதோ ஒரு உயரமான கல்லை நடுத்தெருவில் வைத்து அதைச் சுற்றிச் சுற்றி ஓடிவந்துகொண்டிருந்தனர். அது என்ன விளையாட்டோ அவர்களுக்கே வெளிச்சம். கொஞ்ச நேரம் அப்படி விளையாடிக் கொண்டிருந்தனர்.

விளையாடி முடிந்ததும் அந்தக் கல்லை நடுத் தெருவில் அப்படியே விட்டுவிட்டு அவரவர் வீடுகளுக்குப் போய் விட்டனர். அதன் பின் அந்த வழியாக இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு வந்தனர்.

பேச்சு சுவாரஷ்யத்தில் நடுத்தெருவில் இருந்த அந்தக் கல்லைக் கவனிக்கவில்லை. காலில் இடித்து விட்டது. இரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. வலி தாங்க முடியவில்லை. காலில் இடிபட்ட பெண் திட்ட ஆரம்பித்து விட்டார்.

"வர வர உலகம் மிகவும் கெட்டுப்போய் விட்டது! யாருக்கும் பொறுப்பே கிடையாது. பார்... இப்படி நடுத்தெருவில் பொறுப்பில்லாமல் இந்தக் கல்லைப் போட்டிருக்கின்றனரே இது நியாயமா?'' என்று கடுமையாக விமர்சனம் செய்து கொண்டு அவர்கள் போய் விட்டனர்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு வாலிபன் அந்த வழியே வந்தான். அந்தக் கல்லைப்பார்த்தான். நின்றான் ஒரு நிமிடம் யோசித்தான். என்ன செய்யலாம் என்று பார்த்தான். தன்னுடைய வீரத்தையும் பலத்தையும் காட்ட வேண்டும் என்று நினைத்தான். கொஞ்சம் பின்னால் சென்றான். வேகமாக ஓடிவந்து தாண்டிக்குதித்தான். விசிலடித்துக்கொண்டே போய்விட்டான்.

அடுத்ததாக ஒரு காதல் ஜோடி அந்த வழியாக வந்தனர். நடுத்தெருவில் இருந்தகல் கண்ணில் பட்டது. அவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமாக சேர்ந்து வந்துகொண்டிருந்தனர். நடுவில் கல் இருந்ததனால் சிறிது நேரம் இருவரும் விலகி மீண்டும் சேர்ந்து போக வேண்டும். "கொஞ்ச நேரம் நாம்பிரிய வேண்டியுள்ளதே" என்று மிகவும் கவலையுடன் முணுமுணுத்துக் கொண்டே இந்தப் பக்கம் வந்தனர். அதன்பின் வழக்கம் போல் சேர்ந்து அவர்கள் பாட்டுக்கு எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டே சென்றனர்.

கடைசியாக அந்த வழியாகப் பார்வையில்லாத ஒருவர் வந்தார். அவர் கையில் வழக்கமாக இருக்கின்ற அந்த ஊன்று கோல் இருந்தது. கையில் இருந்த அந்த ஊன்று கோலால் தனக்கு முன்னால் அப்படியும் இப்படியும் தட்டிப்பார்த்துக்கொண்டு மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார்.

வழியில் இருந்த அந்தக் கல் தட்டுப்பட்டது. உடனே நடுத்தெருவில் ஒரு கல் இருப்பதைப் புரிந்து கொண்டார். உடனே குனிந்தார். அந்தக்கல்லைத் தடவி எடுத்தார். தெருவோரமாகக்கொண்டு போய்ப்போட்டார். அதன் பின் அவர் பாட்டுக்குத் தன் வழியில் நடந்து சென்றார்.

இப்போது இதிலே பலர் வந்தனர், சென்றனர். இவர்களில் பார்வையுள்ளவர் யார்? பார்வையில்லாதவர் யார்? இப்படி ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில் கூறுவீர்கள். கொஞ்சம் யோசித்துப்பார்த்தால் இன்று பலர் இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு ஆள் பார்ப்பதற்கு பெரிய மனிதன் போல் தான் இருந்தார். ஒரு தெருவழியாக நடந்து வந்து கொண்டிருந்தார்.

இருட்டு நேரம் வழியில் ஒரு பெரிய கல் இருந்தது. கருங்கல். பார்த்தார். கொஞ்ச நேரம் யோசித்தார். போய்ப் பார்த்தார். மிகவும் பாரமாக இருந்தது.

இன்னுமொரு ஆள் சேர்ந்தால்தான் தூக்கமுடியும். இவர் உடனே தெருவோரமாக இருந்த மரத்தடியில் உட்கார்ந்து விட்டார். யாராவது வருகின்றனரா என்று தெருவின் இரு புறமும் பார்த்தார். சிறிது நேரத்தில் இவருக்குத் தெரிந்த ஒருவர் வந்தார்.

என்ன இது இந்த நேரத்தில் இங்கே உட்கார்ந்திருக்கின்றீர்கள்? என்றார் அவர். "அதோ அந்தக் கருங்கல்'' என்று சுட்டிக்காட்டினார். "ஓ... அதைத்தூக்கி ஓரமாகப் போடவேண்டுமா? வாருங்கள் இருவரும் சேர்ந்து தூக்கலாம்'' என்றார் வந்தவர். " நான் அதற்காக உட்கார்ந்திருக்கவில்லை'' என்றார் இவர். "வேறு எதற்காக?'' என்றார் அவர். "ஒரு மனிதன் கருங்கல்லில் காலை இடித்துவிட்டான் என்றால் எப்படித் துள்ளுவான் என்று பார்க்கவேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. அதற்காக இருக்கிறேன்'' என்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 80 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன

## சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆய்வில் தெரிவிப்பு

(நவாலி)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், இதுவரை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சுமார் 80 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளதாக சிறுவர்பாதுகாப்பு நிதியம் அண்மையில் நடாத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக வடக்கு-கிழக்கில் உள்ள மக்களின் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதிகளில் வசித்த மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு நாட்டின் பல பாகங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 2001ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நிலவிய சுமுகமான சூழ்நிலையை அடுத்து, இடம் பெயர்ந்து சென்று வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்த சுமார் 80 ஆயிரம் தமிழ்,சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ளனர்.

அத்துடன், பாடசாலைகளில் முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் தொகையும் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. இதை விட,வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மேலதிகமாக 17 ஆயிரத்து 500 மணவர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும்,மீளக்குடியேறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்,அழிவடைந்துள்ள வடக்கு-கிழககுப்பகுதியை மீளக் கட்டியெழுப்புவதற்காகவும் இதுவரை சுமார் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசாங்கம் நிதியுதவிகளை வழங்கியுள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்ட இவ் ஆய்வுகளின் மூலம் மேலும் தெரியவந்துள்ளது. (த-102)

# கொழும்பில் காணி மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள்

## காணிகளுக்கு,மாநகர சபையும் வரிவிலக்கு அளிக்கிறதாம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் தங்கள் நண்பர்களுக்கு சட்டவிரோதமான முறையில் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

முகத்துவாரம்,மட்டக்குழி,பொறளை, ஸ்ரீஜெயவர்த்தனபுரக் கோட்டை, மத்திய கொழும்பு ஆகிய இடங்களிலேயே இத்தகைய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பெற்றுக் கொடுக்கப்பட்டு வரும் காணிகளுக்கு மாநகரசபை வரிவிலக்கு வழங்குவதன் மூலம் இத்தகைய மோசடிச் செயல்கள் மூடிமறைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன்,சட்டவிரோதமாக காணிகளைப் பெறுபவர்கள் ஒருவருட காலம் அங்கு வசித்த பின்னர் அதனை வேறு ஒருவருக்கு விற்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்பு கூட்டுத்தாபனம், கொழும்புக்கோட்டை மாநகரசபை ஆகியவற்றில் செல்வாக்குள்ள அரசியல் அதிகாரிகளின் நெருங்கிய உவியாளர்களே இத்தகைய மோசடிச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் அதிகாரிகள் சிலர் தகவல் தெரிவித்துள்ளனர். (த-60,10)

# இராசி பலன்

**28. 12. 2003**

**(மார்கழி 13, ஞாயிற்றுக்கிழமை)**

| | |
|---|---|
| பஞ்சமி | 08.22 மணிவரை |
| சதயம் | மு.இ 11.05மணிவரை |
| இராகுகாலம் | 04.58-06.28 வரை |
| சுபநேரம் | 09.28-10.58வரை |

விநாயகர் சஷ்டி விரதம்

திருவெம்பாவை பூசை ஆரம்பம்

**மேடம்**
கீர்த்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் முன்னேற்றம், கலந்துரையாடல்.

**இடபம்**
புதிய முயற்சி, தொழில் நன்மை, செல்வாக்கு, எதிர்பாராத நன்மை.

**மிதுனம்**
பிறருக்கு உதவுதல், அப கீர்த்தி, பிரயாணம், புதிய திட்டமிடல்.

**கடகம்**
வாகன பயம், உறவினர் வெறுப்பு, தொழில் நன்மை, முயற்சி தாமதம்.

**சிங்கம**
அபூர்வ சந்திப்பு, தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தன இலாபம்.

**கன்னி**
பகைவர் நேசம், தொழில் ஆர்வம், உடல் நலம், காரிய நன்மை.

**துலாம்**
குடும்பக் கவலை, போசன சுகம், சகோதரர் உதவி, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
புதிய விடயம், மனச்சோர்வு, முயற்சி தாமதம், பொருள் சேர்க்கை.

**தனுசு**
கூட்டு முயற்சி, கௌரவமான நிலை, தனவரவு, அந்நியர் சந்திப்பு.

**மகரம்**
மாதர் நட்பு, போசன சுகம், சொத்துக்களால் நன்மை, விவாதம்

**கும்பம்**
பிறர் உதவி, தொழில் முயற்சி, எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு.

**மீனம்**
திடீர் நன்மை, முயற்சி தாமதம், கற்பனை மிகுதி, கோபப்படுதல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# பாடசாலைகளின் முன்னேற்றத்தில் அதிபர்களின் பங்கு அளப்பரியது

*உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு*

(கந்தரோடை)

பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் செற்பாடுகளை வினைத்திறன் உடையதாகவும், முன்னேற்றகரமாகவும் வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அதிபர்களையும் சார்ந்தது என உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், பாடசாலை முகாமைத்துவம் என்பது கூடிய பொறுப்புடைய மிகமுக்கியமான பணிகளில் ஒன்றாகும். இதனைத் திறம்பட முன்னெடுத்துச் செல்வது அதிபர்கள் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். மாற்றமடைந்து வரும் கல்விச் செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில், அதிபர்கள் அதற்கு முகம்கொடுத்து பாடசாலையின் செயற்பாடுகளைத் திறம்பட முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அத்துடன், ஆசிரியர்களின் திறமைகள், கற்பித்தல் கோட்பாடுகள், தொழில் நுட்ப அறிவு போன்றவற்றை அதிபர்கள் தனித்தனியாக இனம் கண்டு அவர்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு வழிகாட்ட வேண்டும். பாடசாலையில் உள்ளக மேற்பார்வைகளில் கூடியளவு அக்கறை செலுத்த வேண்டும்.

மேலும், ஆசிரியர்கள் தமக்கு மத்தியில் கூட்டு உறவு, சிநேகம் போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்வதுடன்,மாணவர்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு வழிகாட்டியாக ஒவ்வொரு அதிபர்களும் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(த-103)

# பாடநூல் அச்சிடும் பணிகள் அரசாங்கத்திடமே உள்ளது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடவிதானங்களைத் தயாரிப்பது பாட நூல்களை அச்சிடுவது அவற்றை விநியோகிப்பது ஆகிய பணிகள் பல்தர பாடநூல் மாற்றுத்திட்டம் ஒன்றின் கீழ் தனியார் துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டில் எவ்வித உண்மையுமில்லை. இவை சம்பந்தமான பணிகள் தற்போதும் அரசாங்கத்திடமே உள்ளது. இவ்வாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மாற்றுப் பாடத்திட்டம் எதிர்வரும் ஜனவரிமாதமமுதல் அமுலபடுத்தப்படவுள்ளபோதும் அது 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற பாடத்தைத் தெரிவு செய்து கொள்வதற்குப் புதிய திட்டம் தடையாக இருக்கும் என இலங்கை ஆசிரியர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (த-60,10)

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது
-குறள்-

# வலம்புரி

## இறைவனின் தண்டனையா?

ஈரான் மாநிலம் ஒன்றில் நடந்த மிகப்பெரிய பூகம்பத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியான செய்தி உலகத்தையே உலுப்பி விட்டது. ஒரு கணத்தில் நடந்த இயற்கையின் அனர்த்தம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவு கொண்டதுடன் ஐம்பதாயிரத்துக்கும் மே.ற்பட்ட மக்கள் படுகாயமடையவும் நேர்ந்துள்ளமை இந்த ஆண்டு விடைபெறப் போகும் சில தினங்களுக்குள் தந்த மிகப்பெரிய சோகமாகும்.

காலத்துக்கு காலம் ஈரானில் நடந்தேறும் இந்தப் பூகம்பத்துக்கு காரணம் அதன் அமைவிடம் - பூமியின் கீழ் உள்ள தட்டுக்களின் அசைவு என்றெல்லாம் விளக்கம் தந்தாலும் ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்'' ஏன் அசைந்து விடுகிறது என்ற கேள்வி எல்லா விளக்கங்களையும் கடந்து எழவே செய்கிறது.

உலகில் அமைதியாக வாழ வேண்டிய மனித இனம், தங்களுக்குள்ளேயே மோதுப்பட்டு அழிந்துபோகின்ற கொடூரத்தை தாங்க முடியாமல் மானிடம் தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில், இயற்கையின் அழிவும் சேர்ந்து கொள்வது மனிதன் விட்ட தவறுக்குச் தெய்வம் தரும் தண்டனையா என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த வையகத்தில் மனிதன் வாழும் வழியைத் தொலைத்து விட்டு நெறிகெட்டு போகின்ற நிலையில், எயிட்ஸ் என்ற கொடூரம் உலகம் முழுவதையும் உலுப்புகின்றது. எயிட்ஸ் இல்லாத நாடே இல்லை என்று கூறும் அளவிற்கு அதன் ஆபத்து, மனித இனத்தை உலுப்புகிறது.

இல்வாழ்க்கையில் மனிதன் விட்ட தவறுக்கு தரப்பட்ட தண்டனைதான் எயிட்ஸ் என்று கூறும் அளவிற்கு அதன் பரம்பல் வேகம்கொண்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மனித சமூகத்திற்கே முடிபு கட்டிவிடுமோ என்ற அச்சத்தை தோற்றுவித்திருக்கும் எயிட்ஸ் என்ற கொடிய உயிர்க்கொல்லியை இந்த வையகத்தில் இருந்து விரட்டுவதற்கு மருத்துவ உலகம் இரவு,பகலாகப் பாடுபடுகிறது. எனினும் சாதகமான முடிபுகள் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் இயற்கையின் சீற்றமும் ஒருபுறத்தில் மனித உயிர்களோடு விளையாடுகிறதெனில், மனித சமூகம் எங்ஙனம் உயிர்வாழ முடியும?

ஒரு நொடிப் பொழுதில் பத்தாயிரம் மனித உயிர்கள் மாண்டு போவதாயின் இறைவா ஏன்? இப்படி? என்ற நெஞ்சத்து நெருடல்கள் முகாரி இசைக்கவே செய்கின்றன.

இத்தகைய இயற்கை அனர்த்தங் கண்டு ஏங்குகின்ற மனித சமூகம், தனது வாழ்க்கைப்பாதையில் நீதி, தர்மம், அகிம்சை என்ற நல்வழிகளைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இல்லையேல், இயற்கையின் சீற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிவது கடினமானதாகவே இருக்கும்.


# ஈழத்தமிழர்களுக்கு உதவி செய்வதற்கு

# தி.மு.க எப்போதும் தயாராகவிருக்கிறது

## அமைச்சர் மகேஸ்வரனிடம் கலைஞர் கருணாநிதி உறுதி

**''ஈழத்தமிழருக்கு உதவி செய்வதற்கு தானும், தனது கட்சியும் எப்பொழுதும் தயாராகவிருப்பதாக'' தமிழக முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.கருணாநிதி இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.**

கடந்த புதன்கிழமை சென்னையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் கருணாநிதியை 40 நிமிடத்திற்கு



மேலாகச் சந்தித்து உரையாடிய அமைச்சர், ஈழத்தில் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் துன்ப, துயரங்கள் குறித்தும், இந்தியாவின் பாராமுகப் போக்குக் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இன்றைய சூழ்நிலையில் கலைஞர் கருணாநிதியும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டும், தொப்புள் கொடி உறவான இந்திய, ஈழத் தமிழர்களின் உறவுக்கு முன்புபோல் மீண்டும் புத்துயிர் கொடுக்கவேண்டும். இதற்குத் தாங்களும் தங்கள் கட்சியும் சகல உதவிகளையும் செய்ய வேண்டும். தமிழகக் கல்லூரிகளில் ஈழத்தமிழ் மாணவர்கள் கல்வி பயிலுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துத் தரவேண்டுமென்றும் அமைச்சர் இச்சந்திப்பின்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரின் இக் கோரிக்கைகளை செவிமடுத்த கலைஞர் கருணாநிதி, எந்த வேளையிலும் தானும், தனது கட்சியும் ஈழத் தமிழர்களுக்கு உதவத் தயாராகவிருப்பதாகவும் முன்பு காணப்பட்டது போன்ற இறுக்கமான இணைப்பு உருவாகி வருவதை உணரக் கூடியதாகவும் கூறினார்.

இன்றைய சமாதான சூழ்நிலை தொடர்பாகவும், சமாதான முயற்சிகள் தடைப்பட்டதால் ஏற்படுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்ததுடன், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மேற்கொண்டுவரும் பணிகள் தொடர்பாக தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் அன்பழகன் தமிழக சட்டசபை உறுப்பினர்களான ஆற்காடு வீராசாமி, நெப்போலியன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் நடிகருமான சரத்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். அமைச்சர் 2 ஆவது உலக இந்து மகாநாட்டுச் சிறப்பு மலரையும், அமைச்சின் "சிவன் ஒளி" மாத இதழையும் அமைச்சின் முன்னேற்றம் மதிப்பீடு அறிக்கையையும் கலைஞர் கருணாநிதியிடம் ஏனைய பிரமுகர்களின் முன் வழங்கினார்.

புதன்கிழமை இரவு காஞ்சிமடப் பெரியார் ஸ்ரீ விஜேந்திர சரஸ்வதி சுவாமிகளையும் அமைச்சர் தனியாகச் சந்தித்துப்பேசினார். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் ஆன்மீகத் தொடர்புகளை வலுவடையச் செய்வது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள காஞ்சிப் பெரியார் இணக்கம் தெரிவித்தார். வடக்கு- கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்த ஆலயங்களைப்



புனரமைப்பது தொடர்பாகவும் ...யக் கல்வி, சிற்பக்கலை ஆகியவற்றுக்கு உரிய உதவிகளை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

(து)

# இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை தமிழ்ச் சமூகம் பலமடையும்

## செல்லச்சாமி நம்பிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல மூலம் 41 தமிழ் உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவாகி, அங்கு தமிழ் சமூகத்தின் உரிமைகளை காக்க ஒருமித்து குரலெழுப்புவார்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் செல்லச்சாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களில் 24பேர் வட பகுதியையும், 17பேர் மலையகத்தையும் பிரதிநிதித்துவம் செய்வர்.

பதுளையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இந் நம்பிக்கையினை தெரிவித்துள்ளார்.

அங்குதொடர்ந்து பேசிய அவர், மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து, பிரதர் ரணில்விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான முயற்சிகள் தடைப்பட்டன. அத்துடன் சமாதான அனுசரணையாளர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். நாட்டில் 99 சதவீதமான மக்கள் சமாதானத்தை விருப்புகிறார்கள். விடுதலைப்புலிகளும் ஜனநாயக பாதையை தேர்ந்செடுத்துள்ளனர். இவ்வேளையில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தற்போது தோன்றியுள்ள அரசியல் ரீதியிலான முறுகல் நிலை களையப்படவேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சமாதானத்திற்கு நேசக்கரம் நீட்டி உள்ளவேளையில், இவ்வாயப்பை சரியாகப் பயன்படுத்தாதது துரதிஷ்டவசமானது, நிரந்தர சமாதானத்திற்காக பிரதமரும், ஜனாதிபதியும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

அண்மையில் மூன்று இலட்சம் இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ளனர். இந் நடவடிக்கையானது தமிழ் சமூகம் தமது உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்திற்கு மேலும் பலம் சேர்க்கும் என்றார் (தி-6)

### தினசரி தியானம்

#### புதிரான மாயை

யாரையும் சார்ந்திராதே. உன்னையே நம்பியிரு. ஆத்மாவை மட்டும் சுற்றிவா. கணவன் வறுமைக்கு ஆளாகும் போது மனைவி அவனைப்புறக்கணித்துவிட்டு இனனொரு வாலிபனை மணக்கிறாள். மனைவி அழகிழக்கும் போது செல்வந்தனான கணவன் அவளை விவாகரத்து செய்துவிட்டு வேறொருத்தியை மணக்கிறான். இது ஒரு புதுமையான உலகம். மாயை என்பது புதிராக இருக்கிறது.

சுவாமி சிவானந்தர்

# கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து பொருட்களைக் கொண்டுவரும் வர்த்தகர்களுக்கும், நிதித்துறையின் ஆயப் பகுதியினருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தென் பகுதியில் இருந்து பொருட்களைக் கொண்டுவரும் சகல வர்த்தகர்களும் முகவர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

(தி)

# தமிழீழ மாணவர் அமைப்பினால் 10 கணனி மையங்கள் திறப்பு

(மருதங்கேணி)

வறுமையிலும் பின்தங்கிய நிலையிலும் உள்ள கிராமங்களைத் தெரிவு செய்து அவற்றை வளப்படுத்தி, தகவல் தொழில்நுட்ப ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக தமிழீழ மாணவர் அமைப்பு இதுவரை பத்து கணனிப் பயிற்ச்சி நிலையங்களைத் திறந்து வைத்துள்ளது.

இவ்வாறு தமிழீழ மாணவர் அமைப்பின் துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் தெரிவித்துள்ளார். மல்லாவியில் இடம்பெற்ற கணனிப் பயிறசி நிலையத் திறப்பு விழாவில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டே கணனி மையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இச் செயற்பாட்டின் மூலம் எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகின் வளர்ச்சிப் போக்குடன் எமது இளம் சமுதாயம் ஒன்றிணைந்து செல்ல முடியும் என்று கூறினார்.

கணனிப் பயிற்சி அலுவலகத்தை தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த நிதி திறந்து வைத்தார்.

(த-35)

# நெடுந்தீவுப் பயணிகள் படகுச்சேவையில் மாற்றம்

(கந்தர்மடம்)

பிரயாணிகளின் நன்மை கருதி நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச் சேவையின் நேரம் மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ். பரமானந்தன் தலைமையில் நடைபெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இந் நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் குறிகட்டுவான் இறங்கு துறையில் இருந்து நெடுந்தீவுக்கு மு.ப. 10.30 மணிக்கு புறப்படும் பயணிகள் படகு ஜனவரி மாதம் முதல் மு.ப.10.00 மணிக்கு புறப்படவுள்ளது. அத்துடன் நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவானுக்கு நண்பகல் 1.30 மணிக்கு வழமையாகப் புறப்படும் படகு பி.ப.2.30 மணிக்கும் புறப்படவுள்ளது.

இந்த குறிகட்டுவான்- நெடுந்தீவு படகுச் சேவையின் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளில் கடமைபுரியும் அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் பயனடையவுள்ளனர். (தி-112)

# க.பொ.த சாதாரண தரத்தில் கணித, விஞ்ஞான பாட பெறுபேறுகளில் முன்னேற்றம்

(கொழும்பு)

அண்மையில் கல்வி அமைச்சு மேற்கொண்ட மதிப்பீட்டின்படி 2002ம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சையில் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர் வீதம் அதிகரித்துள்ளது.

இதன்படி கடந்த 2000ஆம் ஆண்டில் 6.6%ஆக இருந்த கணித பாடத்தில் 75%ற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர் வீதம் 2002இல் 8%ஆக உயர்ந்துள்ளது. இதே நேரம் 2000ஆம் ஆண்டில் கணித பாடத்தில்35க்கு குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர் வீதம் 67.1ஆக இருந்து 2002ல் 60வீதமாக குறைந்துள்ளது. அத்துடன் கணித பாடத்தில் பூச்சியம் பெற்ற மாணவர் வீதம் 2000-ல் 2.7வீதமாக இருந்து 2002ல் 0.45வீதமாகக் குறைந்துள்ளது.

விஞ்ஞான பாடத்தைப் பொறுத்தவரையில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் வீதம் 3.9வீதத்திலிருந்து 2002-ல் 6.1வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் 2000ற்கு பின்னர் ஒரு மாணவரேனும் விஞ்ஞான பாடத்தில் பூச்சியம் புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.

ஆனால் ஆங்கில பாடத்திற்கு இம் முடிவுகள் திருப்திகரமானதாக இல்லை. 75 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களின் வீதம் குறைந்துள்ளதுடன் 20 புள்ளிகளுக்கு குறைவாக பெற்ற மாணவர்களின் வீதமும் அதிகரித்துள்ளது. ஆங்கில பாடத்தில் 75 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களின் வீதம் 2000-ல் 4.1 வீதத்திலிருந்து 2002ல் 3.65 வீதமாக குறைந்துள்ளது. இதேவேளை 20ற்கு குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர் வீதம் 2001ல் 38.4வீதமாக இருந்து 2002ல் 55.3வீதமாக ஆக அதிகரித்துள்ளது. (த)

## தூக்கில் தொங்கியபடி இளம்பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட இளம் பெண்ணின் சடலம் நேற்று யாழ் பொலிஸாரால் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

தாவடிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டது. புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராஜா சோபியா வயது 20 என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார். பிரஸ்தாப பெண்மணி தாவடியில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்தவர் என்றும் சம்பவதினம் இவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதால் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று மாலை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தை புதைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ)


தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் 2004

- பாடசாலைகளுக்கான வெளியீடு
- தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெளியீடு
- தனிப்பட்டவர்களுக்கான வெளியீடு

28.12.2003முதல் நேரடியாக/முகவர் மூலம்/தபால் மூலம் மொத்தமாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்

விரைந்திடு சுந்தர் வெளியீடு

844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☏ 021 222 7086



பாராட்டி வாழ்த்துகிறோம்



கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். உயர் நீதிமன்ற முன்னாள் யூரரும் உலக சைவப் பேரவை (இல.கிளை) இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை, தென்மராட்சி ஓய்வூதியர் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினரும் யாழ்.ப.நோ.கூ.சங்க பொதுச்சபை உப சபை உறுப்பினரும் நல்லூரான் பஜனைக் குழு உறுப்பினரும் ஓய்வுபெற்ற கால்நடை போதனாசிரியருமான

திரு. ஆர்.வி. கந்தசாமி

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதை பாராட்டி வாழ்த்துகிறோம்


## சார்க்...

துள்ளார்.

தன் மீது இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து தனது அமைச்சரவையுடனும் மற்றும் மேல்மட்ட அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே சார்க் மாநாடு திட்டமிட்டபடி ஜனவரி மாதத்தில் நடைபெறுமென ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார்.

திட்டமிட்டபடி அடுத்தாண்டு நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ள உறுப்பு நாடுகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படுமென பாகிஸ்தான் இரா

## சலன சித்திரம் இரண்டாவது மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சலன சித்திர அமைப்பின் இரண்டாவது மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டு நிகழ்வின் போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (தி)

## போலிப் படிவங்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சின் பெயரைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் வீட்டுத் திட்டம், வீடு புனரமைத்தல் மற்றும் ஆலயப் புனரமைப்பு சம்பந்தமான விண்ணப்பப் படிவங்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இந்து கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்வாறு படிவங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், கடைகளின் பெயர் விபரங்களை உடன் தமக்கு அறியத் தருமாறும் அமைச்சு கேட்டுள்ளது. (தி)

## எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல் துறையினரும் தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வரும் எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்குத் தொடரில் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் ஒன்றிற்கான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிரிவு இரண்டுக்கான கருத்தரங்கு தொடர்ந்து 10 மணிக்கும் நடைபெறும்.

அத்துடன் சிகை ஒப்பனையாளர் சங்கத்திற்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் வெண்மை வாணிபச் சங்கத்தினருக்கான கருத்தரங்கு நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலி கலைமகள் சனசமூக நிலையத்திலும் நடைபெறும். (தி)

## கோடிக்...

டுள்ளார்.

யுத்தசூழ்நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க 53 கோடி ரூபா அதிகமாக இம்முறை ஒதுக்கப்பட்டிருப்பதுடன் இராணுவத்தினருக்கு 300 கோடி ரூபாவும், கடற்படைக்கு நவீன கடற்படைக் கலங்கள் உட்பட ஆயுதக் கொள்வனவுக்கு 700 கோடி ரூபாவும் வான்படைக்கு நவீன யுத்த விமானங்கள் உள்ளடங்கலாக

## பண்டிதர் ஆறுமுகம் நேற்றுக் காலமானார்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பண்டிதர் க.வ. ஆறுமுகம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

கவிதை, நாடகம், சிறுகதை ஆகிய துறைகளில் பிரபல்யம் பெற்று விளங்கிய இவர் "அடைப்புக் குறிகள்", "பக்க வாத்தியம் இல்லாத பாட்டுக் கச்சேரி" ஆகிய கவிதைத் தொகுப்புக்களையும் மனிதமும் மதமும் என்ற ஆக்க நூலையும் கவிக் குமரி உள்ளிட்ட பல சிறுகதைகளையும் எழுதியவர். இவரின் எழுத்துப் பணியைப் பாராட்டி கலைபண்பாட்டுக் கழகம் விருது வழங்கிக் கௌரவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று தாவடியில் நடைபெறும். (ந)

## ஆங்கிலப் பாடநெறிக்கான தகுதி காண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பஸ்துன்ரட்ட மற்றும் மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கில பாடநெறியினைப் பயில்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான தகுதி காண் பரீட்சைகள் ஜனவரி 11ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள மேற்படி பரீட்சையானது கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டும் நடைபெறவுள்ளன. இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியே தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் தகுதி காண் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை நடைபெறுமென வடக்குக் கிழக்கு மாகாண நேர்முகப் பரீட்சைக்குழு இணைப்பாளரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுமான கலாநிதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார். (த-18)

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை பலி

(கிளிநொச்சி)

வீட்டு முற்றத்தில் தவழ்ந்து விளையாடிய குழந்தை தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்து பலியானது.

இப் பரிதாப மரணம் கிளிநொச்சி செல்வபுரத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

பெற்றோர் உறக்கத்திலிருந்த சமயம் வீட்டு முற்றத்தில் தவழ்ந்து விளையாடிய குழந்தை, இவ்வாறு

பெற்றதை பாராட்டி வாழ்த்துகிறோம்

கே.சுந்தரலிங்கம் குடும்பத்தினர்

கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் லிங்கம் பில்டிங் கொன்றக்ரர் அரச கட்டட ஒப்பந்தகாரரும். (சி-7067)

சமமதம் தெரிவித்துள்ள உறுப்பு நாடுகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படுமென பாகிஸ்தான் இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ம)

பட ஆயுதக் கொள்வனவுக்கு 700 கோடி ரூபாவும் வான்படைக்கு நவீன யுத்த விமானங்கள் உலங்குவானூர்திகளின் கொள்வனவுக்காக 750 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆயுதக் கொள்வனவிற்காக இம் மாதம் 15ஆம் திகதி உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் சீனாவுக்கு சென்று நெடுந்தூர எறிகணைகள், பீரங்கிகள் மற்றும் கவசவாகனங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாளை திங்கட்கிழமை அங்கிருந்து குறிப்பிட்ட சில நாடுகளுக்குச் சென்று ஆயுதக் கொள்வனவில் ஈடுபடவுள்ளதாகவும் பாதுகாப்புவட்டாரங்களை மேற்கோள்காட்டி அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ம)

பெற்றோர் உறக்கத்திலிருந்த சமயம் வீட்டு முற்றத்தில் தவழ்ந்து விளையாடிய குழந்தை, இவ்வாறு தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்து பலியானது. (வ)

## மாகாண..

மாகாண சபைக்கு 38 உறுப்பினர்களும் சப்பிரமுவா மாகாண சபைக்கு 49 உறுப்பினர்களும் தெரிவாவர்.

உறுப்பினர்களின் இவ் அதிகரிப்பு அடுத்த வருடம் இடம் பெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களின் போது நடைமுறைப்படுத்தப்படுமெனவும் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம)


எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து
உங்கள் வலம்புரியில்
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
எழுதிய
தேச வழமை


## மரண அறிவித்தல்

### கவிஞர், பண்டிதர்
### அல்லை க.வ. ஆறுமுகம்

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் க.வ. ஆறுமுகம் அவர்கள் 27.12.2003 மாலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று பிற்பகல் 3.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்
த.நடராசா

தாவடி (8066)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.